தினமணி

**புரதத்தை இழந்த உணவு வளர்ச்சி**

ஆர்.எஸ். நாராயணன்

First Published : 20 Feb 2012 01:04:14 AM IST

2011-12 விவசாய ஆண்டு 2010-11ஐப் போலவே உணவு உற்பத்தியில் நல்ல சாதனை என்று வேளாண்மைச் செயலர் பி.கே. பாசு அனைத்திந்திய உணவு உற்பத்திப் புள்ளிவிவர மதிப்பீடுகளை 3-2-2012 அன்று வெளியிட்டுப் பேசியுள்ளார். ஒட்டுமொத்த உணவு தானிய உற்பத்தி 2010-11-ல் 24.48 கோடி டன்கள் என்ற நிலை 2011-12-ல் 25.04 கோடி டன்களாக உயர்ந்துள்ளது.

ஒட்டுமொத்த உணவு உற்பத்தி வளர்ச்சி 56 லட்சம் டன்கள் மட்டுமே. அரிசி உற்பத்தி கடந்த ஆண்டைவிட, 60 லட்சம் டன் அதிகம் விளைந்து 10.8 கோடி டன்களாக இந்த ஆண்டு உயர்ந்துள்ளது. கோதுமையும் 64 லட்சம் டன் அதிகம் விளைந்து 8.83 கோடி டன்கள் என்ற நிலையைத் தொட்டுள்ளது.

அரிசியும் கோதுமையும் சேர்ந்து 1.24 கோடி டன்கள் அதிகம் விளைந்தாலும் மொத்த உணவு தானிய உற்பத்தி வளர்ச்சி 56 லட்சம் டன் மட்டுமே. இது ஏன்? பருப்பு உற்பத்தியில் 1.82 கோடி டன் என்ற நிலை இந்த ஆண்டு 1.72 கோடி டன்களே விளைந்து சுமார் 10 லட்சம் டன்கள் குறைந்துவிட்டது. இதர தானியங்களில் மக்காச்சோள உற்பத்தியைத் தவிர வெள்ளைச்சோளம், கம்பு, கேழ்வரகு, சிறு தானியங்களான வரகு, சாமை, தினை போன்றவை சுமார் 50 லட்சம் டன் அளவுக்கு உற்பத்தி குறைந்துவிட்டது.

நிலக்கடலை, எள், கடுகு போன்ற எண்ணெய் வித்துகளின் உற்பத்தி 3.24 கோடி டன்னிலிருந்து 3.03 கோடி டன்னாகக் குறைந்துவிட்டது.

கடந்த இரண்டாண்டுகளாகத் தொடர்ந்து வருணபகவான் அருளிய கொடையை வைத்துச் சேற்றுநில உழவுப் பயிர்களான நெல்லையும் கோதுமையையும் வளர்க்க முடிந்த அளவுக்கு மேட்டுநிலப் பயிர்களான பருப்பு வகைகளையும், புஞ்சைத் தானியங்களையும், எண்ணெய் வித்துப் பயிர்களையும் வளர்க்க முடியாமல் போனது ஏன்?

பொது விநியோகத் தேவையை முன்னிட்டு உணவு தானியங்களில் நெல், கோதுமை உற்பத்திக்கு வழங்கப்படும் கவனம் பருப்புவகைப் பயிர்களுக்கோ, எண்ணெய் வித்துப் பயிர்களுக்கோ, புஞ்சை

தானியப் பயிர்களுக்கோ வழங்கப்படாத காரணத்தால் ஏழை மக்களின் புரதச்சத்துத் தேவையும் புறக்கணிப்புக்குள்ளாகிறது. அதேபோல் தாது உப்புகள் நிறைந்த சிறுதானியங்கள் அழிந்து வருகின்றன.
புஞ்சைப் பயிரில் பெருந்தானியம் என்று கூறப்படும் சோளம், கம்பு, கேழ்வரகு உற்பத்தி குறைவதால் நஷ்டம் மனிதனுக்கு மட்டுமல்ல. கறவைப் பசுக்களின் தீவனத் தட்டுப்பாட்டுக்கும் காரணமாகிறது. எண்ணெய் வித்துப் பயிர் விளைச்சல் குறைவதால் மனிதனுக்குப் புரதத் தேவையுடன் கொழுப்புப் பற்றாக்குறை ஏற்படுகிறது. கால்நடை (கறவைப்பசுக்கள்)களுக்கும் புரதம் வழங்கும் பிண்ணாக்குப் பற்றாக்குறை ஆண்டுக்கு ஆண்டு கூடுகிறது. பிண்ணாக்கு ஏற்றுமதியாவது ஒருபக்கம். கறவைப் பசுக்கள் நோயின்றி வாழ்ந்து பால் உற்பத்தி பெருக மற்ற தீவனங்களுடன் குறைந்தபட்சம் 1 பசுவுக்கு 400 கிராம் பிண்ணாக்கு வேண்டும். அப்போதுதான் 5 லிட்டர் பாலாவது கறக்கலாம். குறிப்பாக, நிலக்கடலைப் பிண்ணாக்கு மட்டுமே கறவைப் பசுக்களுக்கு வழங்கப்படுகிறது. மனிதனுக்கு மட்டுமல்ல. கறவைப் பசுக்களின் நலனை எண்ணி நிலக்கடலை உற்பத்தியை உயர்த்த வேண்டிய கடமை அரசுக்கு உள்ளது. ஆனால், அந்தக் கடமை புறந்தள்ளப்படுவதால் நிலக்கடலை விவசாயிகளும் இன்று விலையில்லாத காரணத்தால் நிலக்கடலை சாகுபடி செய்வதையே நிறுத்தி வருகின்றனர்.
நல்ல மழை இருந்தும் நாடு முழுவதும் நிலக்கடலை உற்பத்தி குறையும் காரணம் எதுவெனில் புரதச்சத்து மிகுந்த நிலக்கடலை சாகுபடி செய்தவன் தனது புரதத்தை இழந்து பருத்தி விவசாயிகளைப்போல் தற்கொலை செய்துகொள்ளும் அளவில் தள்ளப்பட்டு விட்டான். இப்படிப் புரதம் இழந்தவன் நிலக்கடலை விவசாயிகள் மட்டுமல்ல. துவரை போட்ட புரத விவசாயியும் செத்துக் கொண்டிருக்கிறான். உளுந்து, பயறு போட்டவனும் மடிந்து வருகிறான். நெல் உற்பத்தி உயர்ந்துள்ளது. கோதுமை உற்பத்தி உயர்ந்துள்ளது என்று குதிக்கும் கிரிக்கெட் விவசாய அமைச்சர், குறைந்துபோன புரதப்பயிர் உற்பத்திக்குப் பதில் சொல்லாவிட்டால், புரதச்சத்து இல்லாமல் நாள்தோறும் இறந்துவரும் பல்லாயிரக்கணக்கான சிறார்களின் உயிர்களுக்குப் பதில் சொல்ல வேண்டும்.
கடந்த மாதம் ""ஹங்காமா'' என்ற அறிக்கையை (ஹங்கர் - மால்நியூட்ரிஷன்) நந்தி அறக்கட்டளை இந்தியப் பிரதமரிடம் சமர்ப்பித்துள்ளது. அந்த அறிக்கை வழங்கியுள்ள தகவல்படி இந்தியக் குழந்தைகளில் (5 வயதுக்குள்பட்டோர்) 42 சதவிகிதம் புரதம், தாதுப்பு போன்ற போஷாக்கு இல்லாமல் எடை குறைந்தும், போதிய உயரம் இன்றியும், அதிகமான நோய்க் குறிகளுடனும் வளர்வதாகக் கூறப்பட்டுள்ள விஷயத்தைப் படித்த பாரதப் பிரதமர் ""வெட்கப்பட வேண்டிய விஷயம்'' என்று வாய்திறந்து பேசியுள்ளார்.
சிறார் இறப்பு விகிதம் நைஜீரியா, சோமாலியா போன்ற ஏழை நாடுகளுக்கு இணையாக உள்ள இந்தியாவை எவ்வாறு வளரும் பொருளாதார நாடு என்று கூற முடியும்?

இந்தியத் தாய்மார்களுக்கு ரத்தசோகை, மார்பகப் புற்றுநோய், கர்ப்பப்பை புற்றுநோய் எல்லாம் என்னவோ ஜலதோஷம், ஜுரம் என்று சொல்வதுபோல் சாதாரணமாகப் பேசப்படும் நிலை மிகவும் பரிதாபத்துக்குரியது.

இவ்வாறு நோய்வாய்ப்பட்டுள்ள இந்தியப் பெரும்பான்மைக்கு இயற்கையும் விவசாயமும் தரக்கூடிய மருந்தை மறந்துவிட்ட பொருளாதார நிபுணர்கள் விவசாயத்தைப்பற்றி எழுதும்போது கூறப்படும் கருத்துகள் இதைவிடக் குரூரமானவை.

""விவசாயத்தில் தொழில்நுட்ப வளர்ச்சி அமெரிக்கத் தரத்தில் இல்லை என்பதால் அதற்கு ஏற்ப துண்டு நில விவசாயத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டுப் பெரிய பெரிய பண்ணைகள் உருவாகி பயோடெக் என்ற போர்வையில் பி.ட்டி விதைகள் அறிமுகமாக வேண்டும். சிறு - குறு விவசாயிகளை நகரத்துச் சேரிகளுக்குத் துரத்தி அனுப்பிவிட வேண்டும்".

மற்றுமொரு அறிஞர், ""அரிசி, கோதுமை உற்பத்தி போதும். சுற்றுச்சூழலுக்கு மாசு நிகழாதபடி ஏற்றுமதிப் பயிர்களுக்கு முக்கியத்துவம் வழங்கி அமெரிக்க - ஐரோப்பிய சந்தைகளைப் பிடிக்க வேண்டுமென்கிறார். அப்போதுதான் ஜி.டி.ப்பியில் விவசாய வருமானத்தின் பங்கு உயரும்" என்கிறார். எந்த ஓர் அறிஞரும் இந்திய யதார்த்தங்களைப் புரிந்துகொண்டு எழுதுவதாகத் தெரியவில்லை. சற்று யோசித்துப் பார்ப்போம்.

நெல், கோதுமை, கரும்பு, மக்காச்சோளம் ஆகிய உணவுப்பயிர்களில் மட்டுமே உற்பத்தியில் வளர்ச்சி உள்ளது. புஞ்சைத் தானியங்கள், பருப்பு வகைகள், எண்ணெய் வித்து உற்பத்தியில் வீழ்ச்சி உள்ளது. நெல் போன்ற பயிர்களின் வளர்ச்சிக்கு அரசு தலையீடு காரணம். அங்காடி வீழ்ச்சியுறுவதல்ல.

ரூ. 1,000 கொடுத்து குவிண்டால் நெல் வாங்கி, மேலும் ரூ. 1,000 செலவழித்து அரிசியாக்கி மக்களுக்கு கிலோ ரூ. 20 மதிப்புள்ள அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது. கரும்புக்கு ஆண்டுதோறும் அரசு விலை நிர்ணயித்து வழங்கப்படுகிறது. மக்காச் சோளத்தை மான்செண்டோ கவனிக்கிறது. அங்காடிக்கு உத்தரவாதம் உள்ளது. ரூ. 20 மதிப்புள்ள அரிசி 20 கிலோ என்றால் குடும்பத்துக்கு ரூ. 400 மானியம் உள்ளது. இதற்குப் பதிலாக இதே ரூ. 400-க்குள் அடக்கமாகும்படி 15 கிலோ அரிசி வழங்கி மீதி 5 கிலோ துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு, சுண்டக்கடலை, கடலைப்பருப்பு, பயத்தம்பருப்பு 1 கிலோ வீதம் வழங்கலாம்.

எவ்வாறு நெல் கொள்முதலாகிறதோ அவ்வாறே பருப்புகளையும் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்ய வேண்டும். நுகர்வோர்களுக்கு ரேஷன் கடைகளில் இலவசமாக வழங்க வேண்டாம். கிலோ ரூ. 30 என்று விநியோகிக்கலாம். இதில் ஏற்படும் இழப்பை ஈடுசெய்ய 5 கிலோ அரிசியைக் குறைத்துக்கொண்டு அரிசிக்கு வழங்கப்படும் அதே 20 ரூபாய் மானியம் வழங்கலாம்.

புஞ்சைத் தானியங்கள் கால்நடை உணவு என்பதால் ரேஷன் கடைகளில் விலை போகாது. நிலக்கடலைப் பருப்பு, எள் ஆகியவற்றை அரசு கொள்முதல் செய்து வெளி அங்காடிக்கு

வழங்கலாம். எவ்வாறு கொள்முதலாகும் கோதுமையை உணவுக் கார்ப்பரேஷன் வெளி அங்காடிக்கு விற்கிறதோ அவ்வாறே புஞ்சைத் தானியங்களையும் நிலக்கடலைப் பருப்பு, எள் ஆகியவற்றை நேரிடையாக வெளி அங்காடிக்கு விற்கலாம். இப்படிச் செய்தால்தான் புரத உணவு சாகுபடி ஊக்கம் பெறும்.

இரண்டாவதாக, புஞ்சைத் தானியங்களிலும், எள், நிலக்கடலை போன்ற பயிர்களும் நல்ல விளைச்சல் பெற நுண்ணீர்ப்பாசனம் கட்டாயப்படுத்தலாம். நுண்ணீர்ப்பாசனம் செய்யப் பெரிய பண்ணை தேவையில்லை. மேற்படிப் பயிர்கள் எல்லாம் மேட்டு நிலங்களில் வறட்சிப் பயிர்களாக சாகுபடியாகின்றன.

என்னதான் வறட்சிப்பயிர் என்றாலும் முழுக்கவும் மானாவாரி என்ற நிலை மாறி நுண்ணீர்ப்பாசனம் என்பது நீர்சிக்கன நடவடிக்கை. வாய்க்கால் மூலமோ, குழாய்வழியோ இல்லாமல் பயிர்களின் வேர்களுக்கு மட்டும் நீர் கிட்டுமாறு "ஸ்ப்ரிங்ளர்' அமைத்தல்.

முதலமைச்சரின் பல்வேறு இலவசத் திட்டங்களில் நுண்ணீர்ப்பாசனமும் ஒன்று. அவற்றை வறண்ட பயிர்களுக்கு மட்டுமே இலவசமாக வழங்கப்பட வேண்டும். இன்று நுண்ணீர்ப்பாசனம் பழ சாகுபடி மற்றும் மலர் சாகுபடிக்கு மட்டும் பயனாகிறது. இவையெல்லாம் லாபம் கருதி அமைந்தவை. ஆனால், வறண்ட பயிர்களுக்கு வெகு சிலரே நுண்ணீர்ப்பாசனத்தை மேற்கொள்கின்றனர்.

முடிவாக கவனிக்கும்போது, ஏற்றுமதிப் பயிர்களுக்கு வழங்கும் முக்கியத்துவத்தை வறட்சியான புஞ்சைப்பயிர்கள் - குறிப்பாக துவரை, உளுந்து, பாசிப்பயறு, சுண்டல்கடலை, நிலக்கடலை, எள், கடுகு ஆகிய புரதப்பயிர்களின் உற்பத்தி வளர்ச்சிக்கு வழங்க வேண்டும்.

எல்லோருக்கும் உணவு என்ற உணவுக்கு உத்தரவாதச் சட்டம் அரிசி, கோதுமை போன்ற மாவுப்பொருள்களில் மட்டும் அடக்கமாகாது. போஷாக்கு நிரம்பிய புரத உணவுக்கும் உத்தரவாதச் சட்டம் தேவை.

## புயல்: பயிர்க்கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும்

First Published : 19 Feb 2012 03:32:12 PM IST

விழுப்புரம், பிப். 18: புயலால் பாதிப்புக்குள்ளான விழுப்புரம் மாவட்ட விவசாயிகளின் பயிர்க் கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

விழுப்புரம் மாவட்ட விவசாயிகளின் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் வா. சம்பத் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மாவட்ட வருவாய் அலுவலர் என். வெங்கடாசலம், வேளாண் இணை இயக்குநர் த.சேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் விவசாயச் சங்கங்களின் நிர்வாகிகள் ஏ.கே. ஐயங்கார், ராமராஜன், ரங்கராஜன், செல்வராஜ், சுப்புராஜ், என். சுப்பிரமணியன், மதிவாணன், ராதாகிருஷ்ணன், முத்துமல்லா ரெட்டி உள்ளிட்டோர் விவசாயிகள் தொடர்பான பிரச்னைகள், குறைபாடுகள் குறித்துப் பேசினர்.

முன்னதாக கடவம்பாக்கம் மணி உள்ளிட்ட சில விவசாயிகள் புயலால் ஏற்பட்ட பாதிப்புகளை விரைந்து செயல்பட்டு சீரமைப்பதற்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக நிவாரண உதவிகள் வழங்க உத்தரவிட்ட தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு பாராட்டுத் தெரிவித்தனர்.

கூட்டத்தில், கரும்புக்கான கொள்முதல் விலையை டன் ஒன்றுக்கு ரூ. 3 ஆயிரமாக உயர்த்த வேண்டும்.

சம்பா அறுவடை காலம் நெருங்குவதால் கூடுதலாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க வேண்டும். புயலால் பயிர் பாதிப்பு ஏற்பட்டு விடுபட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும்.

விவசாயப் பணிகளுக்கு தடையில்லா மின்சாரம் வழங்க வேண்டும். விவசாயிகளின் பட்டா மாற்றக் கோரிக்கையை உடனடியாக பரிசீலித்து விரைந்து வழங்க வேண்டும்.

புயல் சேதம் காரணமாக நில வரியை ரத்து செய்தது போல், பயிர்க் கடனை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தினர்.

விவசாயிகளின் முறையீடுகளுக்கு மாவட்ட ஆட்சியர் சம்பத் பேசியது: மாவட்டத்தில் தேவைக்கு ஏற்ப கூடுதல் நெல் கொள்முதல் திறக்கப்படும், புயலால் பாதிக்கப்பட்டு நிவாரண உதவி வழங்குவதில் விடுபட்டுப் போன விவசாயிகளுக்கு மீண்டும் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் ஆய்வு செய்து நிவாரணம் வழங்குவர்.

விவசாயப் பணிகளுக்கான மின் விநியோகம் விரைவில் சீரமைக்கப்படும், பழுதடைந்த மின் மாற்றிகள் விரைவில் மாற்றப்படும். பட்டா மாற்றத்துக்கான அரசுக் கட்டணத்தை செலுத்திய விவசாயிகளுக்கு விரைவில் பட்டா மாற்றம் செய்துத் தர நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

முன்னதாக கடந்த குறைகேட்புக் கூட்டத்தில் விவசாயிகளால் தெரிவிக்கப்பட்ட 118 கோரிக்கைகளில் 99 கோரிக்கைகளுக்கு தொடர்புடைய துறை அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட பதில்கள் விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டன.

விடுபட்ட 19 கோரிக்கைகள் தொடர்பான பதில்களை அளித்தத் தவறிய அலுவலர்கள் அதற்கான காரணத்தை தெரிவிக்க வேண்டும் எனவும், பதில்களை ஒரு மாதத்துக்குள் தெரிவிக்க வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சியர் அலுவலர்களுக்கு வலியுறுத்தினார்.

கூட்டத்தில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) சக்கரவர்த்தி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் ராமமூர்த்தி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் எம்.ஆர். லிங்கம், தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் ஏ.பன்னீர்செல்வம் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

## விவசாயிகளின் கவனத்துக்கு..!

First Published : 19 Feb 2012 03:06:21 PM IST

வேலூர், பிப். 18: வேலூர் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் மற்றும் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி ஒருங்கிணைந்த வேளாண் வானிலை தகவல் மையம் இணைந்து வழங்கும் வானிலை சார்ந்த வேளாண் தகவல் பின்வருமாறு:

வேலூர் மாவட்டத்தில் அடுத்த 4 நாள்களுக்கான வானிலை முன்னறிவிப்பு வெளியிடப்படுகிறது. ஞாயிற்றுக்கிழமை முதல் புதன்கிழமை வரை வானம் தெளிவாக காணப்படும். மழைப் பொழிவு இருக்காது. காற்றின் வேகம் மணிக்கு 4 கி.மீ. அளவில் இருக்கக் கூடும். அதிகபட்சமாக 34 டிகிரி செல்சியஸும், குறைந்தபட்சமாக 21 டிகிரி செல்சியஸும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் 27 முதல் 88 விழுக்காடு இருக்கும்.

கால்நடை மேலாண்மை ஆலோசனை: பகல் நேரங்களில் வெப்பத்தின் அளவு அதிகரிக்க வாய்ப்புள்ளதால் கால்நடைகளை கொட்டகை அல்லது மர நிழலில் தங்க வைக்க வேண்டும். மேலும், கொட்டகையின் மேல்புறத்தில் தண்ணீர் தெளிப்பதின் மூலம் கொட்டகையின் உள்புறத்தை குளிர்ச்சியாக வைத்திருக்க முடியும்.கறிக்கோழி பண்ணைகளில் வெப்பம் அதிகமாக உள்ள பகல் நேரத்தில் தீவனம் அளிக்காமல் குளிர்ந்த தண்ணீர் அளிப்பதன்மூலம் வெப்ப தாக்கத்தை குறைக்க முடியும். குளிர்ச்சியான காலை, மாலை நேரங்களில் தேவையான தீவனம் அளிக்கலாம்.6 மாத வயதுக்கு மேல்பட்ட கன்றுக்குட்டிகள் மற்றும் மாடுகளுக்கு கோமாரி நோய்க்கான தடுப்பூசியை போட்டுக் கொள்ள வேண்டும்.ஆடுகளுக்கு தேவையான குடற்புழு நீக்க மருந்தை கொடுத்து பராமரிக்க வேண்டும்.

வேளாண் பயிர்களுக்கு..

வேர்க்கடலை பயிர்களில் களையை நீக்கி தேவையான கலப்பு உரத்தை இடுவதன்மூலம் நல்ல மகசூல் பெறலாம்.நெல் பயிரில் குலை நோய் அறிகுறி தென்பட்டால் புரோபிகனசோல் என்ற பூச்சிக்கொல்லி மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் 2 மில்லி என்ற அளவில் கலந்து தெளிக்கலாம் என்றார்.

## முட்டை விலை ரூ.2.71

First Published : 19 Feb 2012 10:25:58 AM IST

நாமக்கல், பிப். 18: நாமக்கல்லில் முட்டை ஒன்றின் விலை 5 காசுகள் உயர்த்தப்பட்டு ரூ.2.71-ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதற்கான முடிவு நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் சனிக்கிழமை எடுக்கப்பட்டது.

"கோடை காலம் தொடக்கம் காரணமாக முட்டை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், வெளிமாநிலங்களில் முட்டையின் நுகர்வு அதிகரித்துள்ளதால் கடந்த 2 வாரங்களாக முட்டையின் விலை உயர்த்தப்படுகிறது' என்று கோழிப் பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.
இதேபோல், கறிக்கோழி விலை கிலோவுக்கு ரூ.1 உயர்த்தப்பட்டு, ரூ.56-ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**ஆவின் பால் விற்பனை நிலையம் துவக்கம்**

First Published : 19 Feb 2012 10:07:12 AM IST

பவானி, பிப். 18: பவானியை அடுத்த லட்சுமி நகரில் ஆவின் நிறுவன தயாரிப்புகள் விற்பனை மையம் திறப்பு விழா சனிக்கிழமை நடைபெற்றது.
÷ஈரோடு மாநகராட்சி துணை மேயர் கே.சி.பழனிச்சாமி தலைமை வகித்தார். மேயர் மல்லிகா பரமசிவம், ஈரோடு ஊராட்சி ஒன்றியத் தலைவர் கண்ணம்மாள் முன்னிலை வகித்தனர். தமிழக பொதுப்பணித்துறை அமைச்சர் கே.வி.ராமலிங்கம் முதல் விற்பனையைத் தொடக்கி வைத்தார்.
÷சித்தோடு பேரூராட்சித் தலைவர் வரதராஜ், மண்டலத் தலைவர் மனோகரன், பவானி நகர அதிமுக செயலாளர் என்.கிருஷ்ணராஜ், ஆவின் முகவர் கலைச்செல்வி, ஆவின் நிறுவன துணை மேலாளர் (விற்பனை) வெங்கடாசலம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**தானிய ஈட்டுக்கடன்தொகை அதிகரிப்பு**

பிப்ரவரி 20,2012,00:07



தேனி: விவசாயிகளுக்கான தானிய ஈட்டுக்கடன் அதிகரிக்கப்பட்டுள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.உரிய காலத்தில் விவசாயிகளின் விளை பொருட்களுக்கு உரிய விலை கிடைக்காத காலங்களில், அவற்றை கூட்டுறவு சங்க கிட்டங்கிகளில் சேமித்து வைக்க, கிட்டங்கி வசதிகள் உள்ளன. இவ்வாறு சேமித்து வைக்கப்படும் தானியங்களின் ஈட்டின் பேரில் விவசாயிகளுக்கு தானிய ஈட்டுக்கடன் வழங்கப்படுகிறது.கடந்த காலங்களில், அதிக பட்சமாக ஒரு விவசாயிக்கு 2 லட்சம் வரை மட்டுமே கடன் வழங்கப்பட்டது. தற்போது 3 லட்ச ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. தானியங்களின் மதிப்பில் 60 சதவீதம் வரை கடன் வழங்கப்படுகிறது. இதற்கு 12 முதல் 14 சதவீதம் வட்டி வசூலிக்கப்படுகிறது. இதனால், தானியங்களின் மீது அதிக அளவில் கடன் பெற விவசாயிகளுக்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

**மஞ்சள் விலை குறைவால் அறுவடை தாமதம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 20,2012,00:38 IST

கருத்தை பதிவு செய்ய

ஆத்தூர்: மஞ்சள் விலை குறைந்துள்ளதால், விவசாயிகள், அறுவடை பணிகளை துவங்காமல் உள்ளனர். அதனால், மஞ்சள் வேகவைக்கும் கொப்பரை விற்பனையகாமல் தேக்கமடைந்துள்ளது.சேலம் மாவட்டத்தில், ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி, பெத்தநாயக்கன்பாளையம், வீரகனூர், தம்மம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில், 10 ஆயிரம் ஏக்கருக்கு மேல் மஞ்சள் சாகுபடி செய்யப்படுகிறது.இவற்றில், விரலி, உருண்டை மற்றும் பனங்காலி ரக மஞ்சள் வாசனை மிகுந்து காணப்படுவதால், ஆத்தூர் பகுதி மஞ்சளுக்கு, வியாபாரிகள் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்து வருகிறது. ஜனவரி முதல் மார்ச் மாதம் வரை அறுவடை செய்யும் மஞ்சளை, கொப்பரைகளில் வேக வைத்து பதப்படுத்தி, விற்பனை செய்யப்படுகிறது.அதன்படி, கடந்த ஆண்டு, மஞ்சள் குவிண்டால், 18 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையானது. அதனால், வழக்கத்தை விட அதிகளவில், விவசாயிகள் மஞ்சள் சாகுபடி செய்தனர். தற்போது, மஞ்சள் குவிண்டால் அதிகபட்சம், 6,000 ரூபாய் வரை மட்டுமே உள்ளதால், விளைந்த மஞ்சளை அறுவடை செய்யாமல் உள்ளனர்.மஞ்சள் அறுவடையில் காலதாமதம் ஏற்படுவதால், மஞ்சள் வேக வைக்கும் கொப்பரைகள் விற்பனையும் குறைந்துள்ளது. அதனால், மஞ்சள் கொப்பரை தயார் செய்யும் தொழிலாளர்கள் கவலையடைந்துள்ளனர்.

இதுகுறித்து, ஆத்தூர் புதுப்பேட்டையை சேர்ந்த மஞ்சள் கொப்பரை தயார் செய்யும் தொழிலாளர்கள் கூறியதாவது:ஆத்தூர், ராணிப்பேட்டை, கடைவீதி, புதுப்பேட்டை, பழைய பேட்டை பகுதியில், 20க்கும் மேற்பட்ட கடைகளில் தகரத்தினால் மஞ்சள் கொப்பரை, வாலி, முரம்

உள்ளிட்டவைகள் தயார் செய்யப்படுகிறது. இங்கிருந்து, சேலம், நாமக்கல், தர்மபுரி, விழுப்புரம், கடலூர், பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள், கொப்பரைகளை மஞ்சள் மற்றும் நெல் வேகவைப்பதற்கு வாங்கிச் செல்கின்றனர்.கடந்த ஆண்டு ஒரு டன் தகரம், 52 ஆயிரம் ரூபாயாக இருந்தது. தற்போது, டன் தகரம், 57 ஆயிரம் ரூபாய் வரை விற்கப்படுகிறது. தகரத்தினால் வடிவமைக்கும் வால் கொப்பரை, சதுர கொப்பரைகளில், ஒரு மூட்டை மஞ்சள் வேக வைக்கும் அளவு கொப்பரை, 800 முதல், 850 ரூபாய் வரை விற்கப்படுகிறது.தினமும், இரு தொழிலாளர்கள், 24 கொப்பரைகள் செய்தால், தலா, 75 ரூபாய் முதல், 1,000 ரூபாய் வரை கூலி கிடைக்கும். மஞ்சள் விலை குறைந்துள்ளதால், அறுவடை செய்ய காலதாமதம் ஏற்பட்டுள்ளது.அதனால், ஆத்தூர் நகர் பகுதியில் உள்ள கடைகளில், 200க்கும் மேற்பட்ட கொப்பரைகள் விற்பனையாகமல் உள்ளது. மஞ்சள் விலை உயர்ந்தால், கொப்பரை விற்பனையும் அதிகரிக்கும்.இவ்வாறு கூறினர்.

**பார்த்தீனியம் செடி ஒழிப்பு பணி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 20,2012,00:36 IST

கிருஷ்ணகிரி:கிருஷ்ணகிரி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் பார்த்தீனியம் செடிகளை ஒழிக்கும் வகையில், களைகொல்லி மருந்து தெளிக்கும் பணி நகராட்சி சார்பில் தொடங்கியது.மனிதர்கள் மற்றும் கால்நடைகளுக்கு பல்வேறு நோயை உண்டாக்கும் பார்த்தீனியம் செடியை ஒழிக்க தமிழக அரசு பல்வேறு நடவடிக்கை எடுத்து வருகிறது. கிருஷ்ணகிரி நகராட்சியில் முதல் கட்டமாக சேலம் ரோடு, பவர்ஹவுஸ் காலனி, அவ்வை நகர் பகுதிகளில் நகராட்சி சார்பில் பார்த்தீனியம் செடிகளை ஒழிக்க களை கொல்லி மருந்து தெளிக்கும் பணி தொடங்கியது. இந்நிகழ்ச்சியை நகராட்சி தலைவர் தங்கமுத்து தொடங்கி வைத்தார்.

நகராட்சி கமிஷனர் லோகநாதன் முன்னிலை வகித்தார்.அப்போது நகராட்சி தலைவர் தங்கமுத்து, ""ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் நகராட்சி பகுதியில் இந்த பார்த்தீனியம் செடி ஒழிப்பு பணியில் நகராட்சி பணியாளர்கள் ஈடுப்படுத்தப்படுவார்கள், '' என தெரிவித்தார்.

நகராட்சி துணை தலைவர் வெங்கடாசலம், நகராட்சி கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை நகராட்சி சுகாதார அலுவலர் மோகனசுந்தர் மற்றும் ஆய்வாளர்கள் அன்பழகன், ரமேஷ் ஆகியோர் செய்திருந்தனர்.

**பாசிப்பயறு பயிரிட்டால் அதிக வருமானம் பயிற்சி வகுப்பில் வேளாண் அதிகாரி தகவல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 20,2012,01:35 IST

கருத்தை பதிவு செய்ய

அன்னூர் :குறுகிய கால பயிரான, பாசிப்பயறு பயிரிட்டால், நல்ல லாபம் கிடைக்கும் என, பயிற்சி வகுப்பில் வேளாண் அதிகாரி தெரிவித்தார்.

பச்சாபாளையத்தில் வேளாண்துறை, நபார்டு வங்கி மற்றும் சேவா பாரதி சார்பில், கிராம வளர்ச்சி திட்டத்தில், பயறு சாகுபடி குறித்த பயிற்சி வகுப்பு நடந்தது. திட்ட ஒருங்கிணைப்பாளர் சுப்புராஜ் வரவேற்றார்.

துணை வேளாண் அலுவலர் ரங்க ராஜ் பேசுகையில்,""மழை அளவு குறைவாக உள்ள நமது ஒன்றியத்தில், குறுகிய கால வயதுடைய பயறு வகைகளை தனியாகவோ அல்லது கலப்பு பயிராகவோ, பயிரிட முன்வர வேண்டும். விவசாயிகளை க்குவிக்க, தரமான விதைகளை மானிய விலையில், அரசே வழங்குகிறது. அறுவடைக்குப்பின், பயறு வகைகளை, அரசே நல்ல விலை கொடுத்து வாங்கிக் கொள்கிறது. பாசிப்பயறு பயிரிட்டால் நிச்சயம் லாபம் பெறலாம்,'' என்றார்.

உதவி வேளாண் அலுவலர் பசவராஜ் பேசுகையில்,""தரமான விதை மற்றும் உரம், வேளாண்துறை மூலம் வழங்கப்படுகிறது. வேளாண் அலுவலகத்தை அணுகி, பெயர் பதிவு செய்து, அந்தந்த பட்டங்களுக்கான புதிய ரகம், மானியம் ஆகியவற்றை தெரிந்து கொள்ள வேண்டும்.

விவசாயத்தை மட்டும் நம்பியிராமல், ஒருங்கிணைந்த பண்ணை திட்டம் மூலம், வருமானத்தை அதிகரிக்க முயற்சிக்க வேண்டும்,'' என்றார்.

செந்தமிழ் மகளிர் உழவர் மன்றத் தலைவர் சாந்தாமணி,"குறுகிய காலத்தில் மானாவாரியாக பாசிப்பயறு பயிரிட்டதில், அதிக லாபம் கிடைத்தது,' என்றார்.சேவா பாரதி நிர்வாகி மருதாசலம் நன்றி தெரிவித்தார்.

**பயறுவகை பயிற்சி முகாம்விவசாயிகள் பங்கேற்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 20,2012,00:42 IST

கருத்தை பதிவு செய்ய

முசிறி: முசிறி யூனியன் ஆமூர் பஞ்சாயத்தில் தமிழ்நாடு அரசு வேளாண்மைதுறை மற்றும் முசிறி வட்டாரம் சார்பில் விதை கிராம திட்ட விவசாயிகளுக்கான பயிறு வகை பயிற்சி முகாம் நடந்தது.முகாமிற்கு, துணைவேளாண்மை அலுவலர் கிருஷ்ணமூர்த்தி வரவேற்றார். திருச்சி

வேளாண்மை துணை இயக்குனர் சந்திரசேகர் தலைமை வகித்தார். கிராம முக்கியஸ்தர் இருளாண்டி, யூனியன் கவுன்சிலர்கள் கணேசன், பாலசுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆமூர் பஞ்சாயத்து தலைவர் பிரகாசம் பங்கேற்று விவசாயிகளுக்கு பயிறு விதைகளை வழங்கி பேசினார். விழாவில், வேளாண்மை உதவி இயக்குனர் ராஜாமணி பங்கேறு திருந்திய பயிறு வகை தொழில்நுட்பம் பற்றி விளக்கி பேசினார்.

முகாமில், பயிறு வகை விதை உற்பத்தி தீவிர பயிர் சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி, பயிறு வகைகள் சாகுபடிக்கு தமிழக அரசால் வழங்கப்படும் மானியத்திட்டங்கள் உட்பட பல்வேறு வகையான பயிற்சிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. முகாமில் உதவி வேளாண்மை அலுவலர்கள் கலைச்செல்வன், ராஜா, சுரேஷ்குமார், விவசாயிகள், உழவர் மன்றம், மகளிர் சுய உதவிக்குழுவினர் உட்பட பலர் பங்கேற்றனர்.வார்டு கவுன்சிலர் செந்தில் நன்றி கூறினார்.

**ஸ்ட்ராபெரி பழங்களுக்கு தேவை உயர்வு**

பிப்ரவரி 19,2012,02:01



புனே:உள்நாட்டு சந்தைகளில் ஸ்ட்ராபெரி பழங்களுக்கான தேவை, சிறப்பான அளவில் வளர்ச்சி கண்டு வருகிறது. ஸ்ட்ராபெரி அதிகம் விளையும் மகாராஷ்டிராவின் பஞ்சாகனி மற்றும் மகாபலேஸ்வர் பகுதிகளிலிருந்து, இதன் வரத்து 16,000 - 18,000 டன்னாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்தாண்டு, 14,000 - 15,000 டன் என்ற அளவில் குறைந்திருந்தது.நாட்டின் ஸ்ட்ராபெரி பழங்கள் உற்பத்தியில், பஞ்சாகனி மற்றும் மகாபலேஸ்வர் பகுதிகளின் பங்களிப்பு 85 சதவீதமாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. எஞ்சிய பங்களிப்பை, இமாச்சலப் பிரதேசம் மற்றும் ஜம்மு காஷ்மீர் ஆகிய மாநிலங்கள் வழங்குகின்றன.
நாட்டின் ஸ்ட்ராபெரி பழங்களின் மொத்த விற்பனையில், சுற்றுலா பயணிகளின் பங்களிப்பு 50

சதவீதமாக உள்ளது. மும்பை மற்றும் புனே மாநிலங்கள் இதற்கு முக்கிய சந்தைகளாக விளங்குகின்றன. இவை தவிர, தற்போது, சென்னை, பெங்களூரு மற்றும் கோவா ஆகிய பகுதிகளிலும் இதற்கான தேவை அதிகரித்து வருகிறது என ஸ்ட்ராபெரி பயிரிடுவோர் கூட்டமைப்பின் தலைவர் பாபாசாகேப் பில்லாரே தெரிவித்தார்.ஸ்ட்ராபெரி பழங்கள் விரைவில் அழுகும்தன்மை கொண்டவை. இதனால், வெகு தொலைவில் உள்ள சந்தைகளுக்கு இதைக் கொண்டு செல்வது கடினம்.

தற்போது, பெங்களூருக்கு 20 டன் என்ற அளவிலும், சென்னை மற்றும் கோவா பகுதிகளுக்கு முறையே 15 டன் மற்றும் 10 டன் என்ற அளவிலும் ஸ்ட்ராபெரி பழங்கள் அனுப்பப்படுகின்றன. ஸ்ட்ராபெரி பருவம், நவம்பர் துவங்கி மார்ச் வரை கடைபிடிக்கப்படுகிறது. மேலும், இந்தியாவில், ஸ்ட்ராபெரி பயிரிடும் பரப்பளவு 1,700 முதல் 1,800 ஏக்கராக உள்ளது. 1,500க்கும் அதிகமான விவசாயிகள் இத்தொழில் ஈடுபட்டுள்ளனர்.

உற்பத்திச் செலவு அதிகரிப்பு, கூலி உயர்வு போன்றவற்றால், இத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால், வரும் 2013ம் ஆண்டில், ஸ்ட்ராபெரி பயிரிடும் பரப்பளவு கூடுதலாக 100 ஏக்கர் அளவிற்கே அதிகரிக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு பாபாசாகேப் பில்லாரே @மலும் தெரிவித்தார்.

**பருப்பு வகை உற்பத்தி குறையும்**

பிப்ரவரி 19,2012,01:59



புதுடில்லி:பருப்பு வகைகள் உற்பத்தி, நடப்பு 2011 - 12ம் பயிர் பருவத்தில் (ஜூலை - ஜூன்) 1.73 கோடி டன்னாக இருக்கும் என, மத்திய வேளாண் துறை மதிப்பிட்டுள்ளது.பருப்பு வகைகளுக்கான தேவை உயர்ந்து வருகிறது. ஆனால், அதற்கேற்ப பருத்தி உற்பத்தி இல்லாத நிலை உள்ளது. பருப்பு வகைகளின் உற்பத்தியை அதிகரிக்க, மத்திய அரசு பல்வேறு

நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பருப்பு வகைகளின் உற்பத்தி, கடந்த 2005ம் ஆண்டு முதல் (2008 - 09 நீங்கலாக) ஆண்டுக்காண்டு அதிகரித்து வருகிறது.கடந்த 2005 - 06ம் பயிர் பருவத்தில், பருப்பு வகைகளின் உற்பத்தி 1.34 கோடி டன்னாக இருந்தது. இது, 2006 - 07ம் ஆண்டில் 1.42 கோடி டன்னாகவும், 2007 - 08ம் ஆண்டில் 1.47 கோடி டன்னாகவும் உயர்ந்திருந்தது.2008 - 09ம் பயிர் பருவத்தில், பருப்பு வகைகளின் உற்பத்தி 1.45 கோடி டன்னாகவும், 2009 - 10ல் 1.46 கோடி டன்னாகவும் இருந்தது.இந்நிலையில், கடந்த 2010 - 11ம் ஆண்டு, பருப்பு வகைகளின் பயிரிடும் பரப்பளவு அதிகரித்ததை அடுத்து, பருப்பு உற்பத்தி, சாதனை அளவாக 1.82 கோடி டன்னாக உயர்ந்தது.இயற்கை இடர்பாடுகள் உள்ளிட்ட காரணங்களால், நடப்பு பயிர் பருவத்தில் பருப்பு வகைகளின் உற்பத்தி, கடந்த ஆண்டை விட குறையும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.